**கிருஷ்ணகிரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறை ஆணைகள்**

**பிறப்பிப்பவர்: திருமதி.கே.பி.மகேஸ்வரி.எம்.ஏ.பி.எட்.,**

**ந.க.எண் 8042/ஆ1/2021 நாள்:22/01/2022.**

பொருள் தமிழ்நாடு அமைச்சுப்பணி - பணிவரன்முறை -2018-19 மற்றும் 2019-20 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (Group iv Services ) மூலம் தேர்வு செய்யப்பட்டு கிருஷ்ணகிரி மாவட்டம், கிட்டம்பட்டி, அரசு உயர்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.வ.வசந்தி, என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடல்- தொடர்பாக.

பார்வை 1.கிருஷ்ணகிரி மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க எண் 3732/ஆ1/2020 நாள்:17.09.2020.

2.கிட்டம்பட்டி, அரசு உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியரின் கடித ந.க எண் 83/2021 நாள் 27/12/2021.

==@@@@@==

**ஆணை:**

கிருஷ்ணகிரி மாவட்டம், கிட்டம்பட்டி, அரசு உயர்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.வ.வசந்தி, என்பார், 2018-19 மற்றும் 2019-20 ஆம் ஆண்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் இளநிலை உதவியாளர் பதவிக்கு நேரடி நியமனம் மூலம் (Group iv Services ) தற்காலிக அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு பள்ளிக் கல்வித்துறைக்கு ஒதுக்கீடு பெற்று பார்வை 1 ல் காண் செயல்முறைகள் வாயிலாக அன்னாருக்கு நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறு தமிழ்நாடு அமைச்சுப்பணியில் வகை 14 ன் கீழ் உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்தில் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ள கீழ்காண் பணியாளருக்கு பணிவரன்முறை செய்யக் கோரி பார்வை 2 ல் காண் கடிதத்தின் வாயிலாக கருத்துருக்கள் பரிந்துரை செய்து பெறப்பட்டுள்ளதற்கிணங்க, கீழ்கண்ட இளநிலை உதவியாளருக்கு அவரின் பெயருக்கு எதிரே கலம் 3 ல் குறிப்பிட்டுள்ள நாளில் பணி வரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| பெயர் , பதவி மற்றும் பணிப்புரியும் அலுவலகம் / பள்ளி | இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பணி வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| திருமதி.வ.வசந்தி,<br>இளநிலை உதவியாளர்,<br>அரசு உயர்நிலைப் பள்ளி,<br>கிட்டம்பட்டி.<br>கிருஷ்ணகிரி மாவட்டம். | 21-09-2020 மு.ப | 21-09-2020 மு.ப |

மேற்படி பணியாளர் இளநிலை உதவியாளராக சேர்ந்த ஆண்டு / தர எண் அடிப்படையில் முன்னுரிமை அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இப்பணிவரன்முறையானது பார்வை 1 ல் தெரிவித்துள்ளபடி, இந்நியமனம் குறித்து நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்கின் இறுதி தீர்ப்பிற்கு உட்பட்டதாகும்.

இப்பணியாளர் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுவார். தகுதிகாண் பருவக் காலத்திற்குள் பவானி சாகர் அடிப்படைப் பயிற்சினையும், தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வினையும் கண்டிப்பாக தேர்ச்சி பெற வேண்டும்.

இந்த பணிவரன்முறை ஆணை குறித்து சம்மந்தப்பட்ட அலுவலர்/ தலைமையாசிரியர் அன்னாரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு: 1.அசல் பணிப்பதிவேடு.

2.மதிப்பெண் சான்றிதழ் மற்றும் அதன் உண்மைத்தன்மை அறிக்கை அசல் (10 ஆம் வகுப்பு).

3.சாதிச்சான்றிதழ் மற்றும் அதன் உண்மைத்தன்மை அறிக்கை அசல்.

22/11/22

முதன்மைக் கல்வி அலுவலர்
கிருஷ்ணகிரி

பெறுதல்
திருமதி.வ.வசந்தி,
இளநிலை உதவியாளர்
அரசு உயர்நிலைப் பள்ளி, கிட்டம்பட்டி.
கிருஷ்ணகிரி மாவட்டம். (உரிய வழியாக)

22/11/22

நகல்: மாவட்டக் கல்வி அலுவலர், கிருஷ்ணகிரி.
நகல்: தலைமையாசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, கிட்டம்பட்டி, கிருஷ்ணகிரி மாவட்டம்.